கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 23.02.2013

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 22.02.2011

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (85)

### 85. விடை காண முடியாத சில கேள்விகள்!




அடுத்த சில நாட்களில் எம்முடன் தொடர்புள்ள மேலும் சிலர் புலிகளால் கடத்தப்பட்டு வதை முகாமுக்கு கொண்டு வரப்பட்டனர். அவர்களில் மூவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த பி.எல்.எப்.ரி (என்.எல்.எப்.ரி இயக்கத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் அதன் ஸ்தாபகரான தோழர் வி.விசுவானந்ததேவன் பின்னர் உருவாக்கிய 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி) உறுப்பினர்கள். அவர்களில் ஒருவரை எனக்கு முன்னரே நன்கு தெரியும். மற்றைய இருவரும் எனக்குத் தெரிந்தவர்கள் அல்ல.

இவர்களில் எனக்குத் தெரிந்தவரைத் தவிர ஏனைய இருவரையும் எனது சிறைக்கூடத்துக்குள் அடைத்து வைத்தனர். அவர்கள் சிறைக்குள் இருந்த யாருடனும் கதைக்கவில்லை. ஆனால் அவர்களில் ஒருவர் அழுதபடி இருந்தார். அவர்களில் எனக்குத் தெரிந்தவரை ஒரு தடவை புலிகளின் விசாரணையாளர்களில் ஒருவனான விநோதன் என்பவன் எமது சிறை வாசலுக்கு அழைத்து வந்து, என்னை அழைத்து அவருக்கு அருகில் நிறுத்திவிட்டு, என்னைக்காட்டி (அவர் கூண்டுக்கு வெளியே நான் உள்ளே) "இவரைத் தெரியுமா?" என அவரிடம் வினவினான். அதற்கு அவர் 'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டிய பின், அவரை அழைத்துச் சென்றுவிட்டான்.

புலிகள் கொண்டு வந்த நான்காமவர் பரந்தன் குமரபுரத்தைச் சேர்ந்த 'நவம்' என அனைவராலும் அழைக்கப்படும் க.நவரத்தினம். இவர் எமது கட்சி உறுப்பினர் அல்லவென்ற போதிலும், எமது அனுதாபியாக இருந்தார். 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற வெகுஜன அமைப்பை நாம் ஆரம்பித்த நாட்களில், தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக 5 கோரிக்கைகளை வலியுறுத்தி நடாத்திய நாடு தழுவிய சுவரொட்டிப் பிரச்சாரத்தின் போது, பரந்தன் பகுதியில் சுவரொட்டி ஒட்டும்போது, நவம் இன்னும் இரு தோழர்களுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டு சில நாட்கள் சிறை வாசமும் அனுபவித்தவர். நிறைய வாசிப்பதுடன், பரந்த அனுபவத்தையும் பெற்ற ஒருவராக இருந்தார்.

நான் யாழ்ப்பாணத்தில் 1972இல் கட்சி வேலைகளைப் பொறுப்பேற்ற பின்னர், கட்சி வேலைகளாகப் பரந்தன் செல்லும் வேளைகளில் தவறாது குமரபுரம் செல்வதுண்டு. ஏனெனில் அங்குதான் எமது கிளிநொச்சிப் பகுதி முக்கிய தோழர்களில் ஒருவரும், கிளிநொச்சி விவசாயிகள் சங்கத்தின் செயலாளருமான தோழர் கே.சந்திரசேகரத்தின் வீடும் இருந்தது. அவரது வீடும், நவத்தின் வீடும் அருகருகே இருந்ததால், அங்கு செல்லும் வேளைகளில் பெரும்பாலும் நவத்தின் வீட்டில் தங்குவதுண்டு. அதற்காகவே அவர் தனது வீட்டின் முன் அறையை எம் போன்றவர்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தார்.

அவரை என்ன காரணத்துக்காக புலிகள் வதை முகாமுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது புரியவில்லை. அவரைக் கொண்டு வந்திருப்பதால், தோழர் சந்திரசேகரத்தையும் புலிகள் கடத்தியிருப்பார்களோ என எண்ணினேன். தோழர் சந்திரசேகரம் எமது கட்சியின் முக்கியஸ்தர் மட்டுமின்றி, பரந்தனில் அந்தக் காலகட்டத்தில் பெரும்தொகை இளைஞர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்ட 'பரந்தன் இளைஞர் வட்டம்' என்ற அமைப்பிலும் முக்கியமான ஒருவராகச் செயற்பட்டவராவார். எனக்குத் தெரிந்த குருநகர் வாலிபருக்கு என்னைக் காட்டியது போல, நவத்துக்கும் என்னைப் புலிகள் காட்டினர். அவரும் என்னைத் தெரியும் எனத் தலையாட்டியது போல இருந்தது. அவரை சிறைக்குள்ளே அடைக்காமல் வெளி விறாந்தையிலேயே உட்கார வைத்திருந்தனர்.

புலிகள் தற்பொழுது வதை முகாமுக்கு கொண்டு வந்திருந்த நால்வரையும் என்னை விசாரித்தது போல, பெரிதாக விசாரித்ததாகத் தெரியவில்லை. அவர்களைப் பாரதூரமாக அடித்ததாகவும் தெரியவில்லை. அதைவிட முக்கியமான விடயம் எனது சிறைக்குள் அடைத்து வைத்திருந்த குருநகரைச் சேர்ந்த இருவரையும் மற்றவரையும் இரண்டோ மூன்றோ நாட்கள் கழித்து புலிகள் வெளியே அழைத்துச் சென்றுவிட்டார்கள். அவர்கள் திரும்பக் கொண்டுவரப்படவில்லை. இவர்கள் புலிகளுக்கு எதிரான இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்தபடியால், 'இறைச்சிக்கடை' என்ற வரணியிலிருந்த மோசமான சித்திரவதை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என எண்ணினேன். வதை முகாமிலிருந்த வேறு சிலரும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டனர்.
பி.எல்.எப்.ரி தலைவர் விசுவானந்ததேவன் படகு மூலம் இந்தியா செல்கையில் கடலில் வைத்து காணாமல் போயிருந்தார். புலிகளே அவரையும், அந்தப் படகில் சென்ற ஏனையோரையும் கடத்திச் சென்று கொலை செய்துவிட்டு ஏதாவது ஒரு தீவில் புதைத்திருக்கலாம் என்ற அபிப்பிராயம் பொதுவாக நிலவியது.

ஆனால் பின்னர் சிலர் மூலம் கிடைத்த தகவல்களின்படி, அந்த குருநகர் இளைஞர்கள் மூவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகத் தெரிய வந்தது. இந்தக் கொடூரமான சித்திரவதை முகாமிலிருந்து அவர்கள் விடுதலை செய்யப்பட்ட விடயம், மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒன்று என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. ஆனால் கேள்வி என்னவெனில், அவர்கள் ஒரு குறிப்பிட்ட இயக்கத்தைச்



Yarl TV Live

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

சேர்ந்தவர்கள் என்ற விடயம் புலிகளுக்குத் தெரிந்திருந்தும், எவ்வாறு அவர்கள் சுலபமாக விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதுதான்!

ஏனெனில் அவர்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த அன்ரன், ஞானம், ரமணி போன்றவர்கள் முன்னரே கடத்தப்பட்டு, இன்றுவரை அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா இல்லையா என்பதே யாருக்கும் தெரியாது. நான் கடத்தப்பட்ட பின்னர் கடத்தப்பட்ட சிலர் என்னுடன் சிறையில் இருக்கின்றனர். எனவே இந்த மூவரது விடுதலையும் பல சந்தேகங்களையும், கேள்விகளையும் எனக்குள் எழுப்பியது. ஏதோ ஒருவகைச் செல்வாக்கு அவர்களது விடுதலைக்குக் காரணியாக இருந்துள்ளது. அது என்ன வகையான செல்வாக்கு?

கூண்டுக் கிளியாக இருந்த என்னால் அந்தக் காரணி என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு அந்த நேரத்தில் வாய்ப்பேது? அந்த விடயம் நினைத்துப் பார்ப்பதற்குக்கூட லாயக்கற்றது. ஆனால் பல உண்மைகள் காலம் கடந்து என்றாலும் ஏதோ ஒரு சமயத்தில் வெளிவரத்தான் செய்யும் என்பதற்கு வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு. இந்த விடயத்திலும் அந்த உண்மை ஒன்றரை வருடங்கள் கழித்து வெளிவரத்தான் செய்தது. அது முழுமையாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட ஒன்று எனச் சொல்ல முடியாவிட்டாலும், பனிப்புகாரைக் கிழித்துக்கொண்டு ஒரு கீற்று தென்பட்டது.

அந்த விடயம் இந்தக் கட்டுரைத் தொடரின் இறுதிப் பகுதியில் சொல்லப்பட வேண்டியது என்ற போதிலும், அந்த விடயத்தின் முக்கியத்துவம் கருதியும், விடயத்தின் தொடர் அறுந்து விடாமல் இருப்பதற்காகவும் இப்பொழுதே அதைச் சொல்லி விடுவது நல்லது எனக் கருதுகிறேன்.

ஒன்றரை ஆண்டுகளின் ஆண்டு சிறை வாசத்தின் பின்னர் புலிகள் என்னை விடுதலை செய்தார்கள். என்னை முறைப்படி விடுதலை செய்வதற்கு முன்னர், நான் இறுதியாக ஒரு வருடம் தடுத்து வைக்கப்பட்டிருந்த நாவற்குழி - கோவிலாக்கண்டி திறந்தவெளி முகாமிலிருந்து கொண்டு வரப்பட்டு, கல்வியங்காடு புதுச்செம்மணி வீதியிலிருந்த புலிகளின் 'விநோத் முகாமில்' 5 நாட்கள் வைக்கப்பட்டிருந்தேன். அங்கு புலிகளின் புலனாய்வுப் பிரிவின் இரண்டாவது (பொட்டம்மானுக்கு அடுத்த) தலைவர் கபிலம்மான் வந்து என்னுடன் சுமார் 3 மணித்தியாலங்கள் உரையாடிய பின்னர் ஒரு பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு (என்.எல்.எப்.ரி இயக்கத்தின் அரசியல் ஆலோசகராகப் பணியாற்றியதாக) விடுதலை செய்தார். கபிலம்மான் என்னுடன் அரசியல் உட்படப் பல விடயங்கள் குறித்தும் உரையாடினார். உரையாடலின் முடிவில் அவர் என்னிடம் சில விடயங்களைக் குறிப்பிட்டார்.

அதாவது நான் விடுதலை செய்யப்பட்டு வெளியே போன பின்னர், எனது வழமையான கம்யூனிஸ்ட் கட்சி அரசியல் வேலைகளில் ஈடுபட வேண்டாம் எனக் கூறினார். அதற்கு கபிலம்மான் கூறிய காரணம், தாம் தமிழ் ஈழத் தனியரசு அமைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில், நாம் வர்க்க அடிப்படையிலான போராட்டத்தை முன்னெடுத்தால், அது தமது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சக்திகளைப் பிளவுபடுத்தித் தமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தி விடும் என்பதாகும். தாம் தனிநாடு ஒன்றை அமைத்த பின்னர், வேண்டுமானால் எமது அரசியல் வேலைகளைத் தொடரும்படி கூறினார்!

அவர் இன்னொரு விடயத்தையும் என்னிடம் கூறினார். அதாவது விரும்பினால் என்னைத் தம்முடன் (புலிகளுடன்) இணைந்து வேலை செய்யலாம் எனவும் கூறினார். அப்படி வெளிப்படையாக வேலை செய்வதில் ஏதாவது சிக்கல் அல்லது விருப்பமின்மை இருக்குமாக இருந்தால், எமது சிறைக்குக் கொண்டுவரப்பட்ட அந்த குருநகர் இளைஞர்களில் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் செய்வது போலத் தம்முடன் இரகசியமாக வேலை செய்யலாம் என்றும் சொன்னார்! அதற்காக எப்பொழுது வேண்டுமானாலும் தன்னை தனது பிறவுண் வீதியில் கலட்டிச் சந்திக்கு அருகாமையில் உள்ள தனது முகாமில் வந்து சந்திக்கலாம் எனவும் சொன்னார்.

அவர் இறுதியாகச் சொன்ன இந்த வார்த்தைகள் என்னைத் திடுக்கிட வைத்தது. இன்று வரையும் அந்தத் திகைப்பு என்னை விட்டு நீங்கவில்லை. மற்றைய இயக்கங்களில் இருந்தது போல, தோழர் விசுவானந்ததேவனின் இயக்கத்திலும் புலிகளின் ஒரு கறுப்பு ஆடா?

இந்த நபர் முன்னரே திட்டமிட்ட முறையில் விசுவானந்ததேவனின் இயக்கத்துக்குள் புலிகளால் அனுப்பப்பட்டவரா? அல்லது புலிகள் எல்லா இயக்கங்களையும் தடை செய்து, அவற்றின் உறுப்பினர்களை வேட்டையாடியது போல, விசுவானந்ததேவனையும் தீர்த்துக்கட்டிய பின்னர், சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தன்னைத் தற்பாதுகாத்துக் கொள்வதற்காகப் புலிகளுடன் இணைந்தவரா என்பதை, என்னால் அனுமானிக்க முடியவில்லை.

நான் எழுந்தமானமாக எவரையும் குற்றம் சாட்டுவதோ அல்லது சந்தேகிப்பதோ சரியல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனது மனதை உறுத்திய விடயம் என்னவெனில், இந்த மூவரும் இரண்டு மூன்று நாட்களில் விடுதலை செய்யப்பட்டதும், கபிலம்மான் அவர்களில் ஒருவரைப் பற்றிச் சொன்ன கதையும்தான். பொதுவாக புலிகள் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைதுசெய்து அவரை விசாரணைக்கு உட்படுத்தி, அவர் குற்றமற்றவர் எனக் கண்டு விடுதலை செய்வதானாலும், சாதாரணமாக இரண்டு மாதங்கள் வரை எடுக்கும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். சில வேளைகளில் கபிலம்மான் ஒரு தந்திரமாக அந்தக் குறிப்பிட்ட நபரைப்பற்றி என்னிடம் கதை விட்டிருக்கலாம்.

ஆனால் வேறு சில விடயங்களையும் வைத்துப் பார்க்கும்போது, எனது சந்தேகம் வலுவடையவே செய்தது. கபிலம்மான் குறிப்பிட்ட அந்த நபர், தோழர் விசுவானந்ததேவன் படகில் இந்தியா புறப்பட்டுச் சென்ற வேளையில், அவரை வழியனுப்பி வைத்தவர்களில் ஒருவராக கடற்கரையில் இருந்திருக்கிறார். அத்தோடு அவர் அந்தச் சமயத்தில் அந்தத் துறையில் நின்றிருந்த சில ஈரோஸ் இயக்க உறுப்பினர்களுடன் வாய்த் தர்க்கத்திலும் ஈடுபட்டிருக்கிறார். ஒர் இயக்கத்தின் முக்கியமான தலைவர்

இரகசியமான முறையில் ஒரு பயணத்தை மேற்கொள்கையில், அதை மிகவும் கவனமாகப் பாதுகாக்காமல், அதை அம்பலப்படுத்தும் வகையில் செயற்படுவதை எந்த வகையில் நியாயப்படுத்த முடியும்?

இது தற்செயலாக நடந்ததா அல்லது திட்டமிட்டுச் செய்யப்பட்டதா என்பதை என்னால் சொல்ல முடியாது. ஏனெனில் இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் நான் இருந்திருக்கவில்லை. அங்கு நின்ற விசுவானந்ததேவனின் இயக்கத் தோழர்கள் சிலரே பின்னாட்களில் இந்தத் தகவல்களை எனக்குச் சொன்னார்கள்.

நான் தோழர் விசுவானந்ததேவனை அவர் இந்தியா புறப்படுவதற்கு முதல்நாள் கோண்டாவிலிலுள்ள அவரது மாமியார் (மனைவியின் தாயார்) வீட்டில் சந்தித்து சில மணித்தியாலங்கள் உரையாடினேன். அவர் இந்தியா புறப்படுவதற்கு முன்னர் என்னைச் சந்திக்க விரும்பியதால், அவரது இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் என்னை விசுவானந்ததேவனிடம் அழைத்துச் சென்றிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் தான் இந்தியா செல்லவிருப்பது குறித்து என்னிடம் பிரஸ்தாபித்தார். ஆனால் எப்பொழுது, எங்கிருந்து புறப்படப் போகின்றார் என்ற விபரங்களை அவர் என்னிடம் தெரிவிக்கவில்லை. எனக்கும் அது அவசியமாகப்படவில்லை. ஆனால் அந்தச் சந்திப்புத்தான் எமது இறுதிச் சந்திப்பாக அமையும் என நான் எண்ணாமலே அது அமைந்துவிட்டது.

மறுநாள் விசுவானந்ததேவன் பயணம் செய்த நெடுந்தீவைச் சேர்ந்த இரத்தினம் என்பவரின் படகு இரத்தக் கறைகளுடன் நயினாதீவு கடற்படை இறங்குதுறையில் நிறுத்தப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்த பின்னரே நடந்துள்ள விபரீதம் எமக்குப் புரிந்தது.

அதன் பின்னர் என்னைச் சந்தித்த தோழர் சசி.கிருஸ்ணமூர்த்தி (பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் செயலாளராக இருந்தவர். புலிகள் பூநகரில் சுட்டு வீழ்த்திய 'லயன் எயார்' விமானத்தில் பயணம் செய்கையில் மரணித்தவர்), தோழர் விசுவானந்ததேவன் இந்தியா புறப்படுவதற்கு முதல் நாள் இரவு யாழ்.மருதடி வீதியிலிருந்த தனது வீட்டில்தான் தங்கியிருந்தார் என்ற தகவலைச் சொன்னார். அத்துடன் அவர் என்னைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று, விசுவானந்ததேவன் மறுநாள் இந்தியா புறப்படுவதற்கு முன்னர் தான் நீண்டகாலமாக வளர்த்திருந்த குறுந்தாடியை அவரது வீட்டுக் கிணற்றடியில் மழித்துப் போட்டுள்ளதைக் காட்டி மிகவும் மனங்கலங்கி வேதனைப்பட்டார்.

தோழர் விசுவானந்ததேவனின் மரணம் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டதா அல்லது எதிர்பாராமல் சந்தர்ப்பம் வாய்த்து செய்யப்பட்டதா என்பதைக் காலம்தான் வெளிக்கொணர வேண்டும். ஆனால் அதன் பின்னணியில் அவிழ்க்கப்பட வேண்டிய சில மர்ம முடிச்சுகள் உள்ளன.

கபிலம்மான் குறிப்பிட்ட அந்த குருநகரைச் சேர்ந்த விசுவானந்ததேவனின் இயக்க உறுப்பினரை, நான் விடுதலையாகி வந்த பின்னர் மூன்று தடவைகள் கண்டேன். முதல் தடவை காணும் போது, என்னுடன் பி;.எல்.எப்.ரி இயக்கத்திலிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த ஒருவரும் இருந்தார். ஒரு கடை வாசலில் அந்த நபர் ஏதோ வாங்குவதற்காக சைக்கிளை நிறுத்தினார். நாம் அவருடன் கதைப்பதற்காக அவர் அருகில் சென்றபோது, அவர் எம்மைப் பார்த்துவிட்டு தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

இன்னொரு தடைவ நான் சைக்கிளில் யாழ்.றக்கா வீதியால் செல்லும்போது அவர் எதிரே வந்து கொண்டிருந்தார். தூரத்தில் என்னை அவதானித்துவிட்ட அவர், திடீரென குறொசெற் வீதியால் சைக்கிளைத் திருப்பிக்கொண்டு போய்விட்டார்.

அடுத்த தடவை நானும் பி;.எல்.எப்.ரி இயக்கத்திலிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த நண்பரும் சைக்கிள்களில் சவாரி செய்தபோது, அதே றக்கா வீதியில் எதிர்பாராமல் நேருக்கு நேர் சந்திக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது. இந்தத் தடைவ அவர் எனக்குத் தலையசைத்துவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

அப்பொழுது புலிகள் யாழ்ப்பாணத்தைத் தமது இரும்புப் பிடியில் வைத்திருந்தபடியால், பயம் காரணமாக என்னைச் சந்திப்பதை அவர் தவிர்த்தும் இருக்கலாம்.

அதன் பின்னர் நான் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர், புலிகளின் தேடுதலுக்குப் பயந்து மறைந்தும் மறையாமலும் கொழும்பில் இருந்த போது, புறக்கோட்டையில் கடை வைத்திருந்த எனது நண்பர் ஒருவரிடமிருந்து ஒருநாள் எனக்கு ஒரு அழைப்பு வந்தது. நான் குறிப்பிட்ட அந்த குருநகரைச் சேர்ந்த நபர் (எனது நண்பருக்கும் அவரைத் தெரியும்) தனது கடைக்கு வந்திருப்பதாகவும், நான் கொழும்பில் இருப்பது குறித்து அவருக்குச் சொல்லி, என்னைச் சந்திக்க விருப்பமா எனக் கேட்ட பொழுது அவர் விரும்பியதாகவும், எனவே என்னைத் தனது கடைக்கு உடன் வரும்படியும் அவர் அழைத்தார்.

நான் அவரது அழைப்பை ஏற்க முடியாமல் இருப்பதைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, குறித்த நபர் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படி எனது புறக்கோட்டை கடைக்கார நண்பரிடம் சொன்னேன். பின்னர் வேறு ஒருநாளில் புறக்கோட்டை நண்பரிடம்; சென்று குறித்த நபர் பற்றிய எனது ஐயப்பாட்டினை விளக்கிச் சொன்னேன்.

தொடரும்

முன்னைய பதிவுகள்